செ.வெ.எண்: 313/2016 நாள்: 31.05.2016

## பத்திரிகைச் செய்திக்குறிப்பு

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அரசு பள்ளிகளில் பயின்று அதிக மதிப்பெண் பெறும் பி.வ, மிபிவ/சீம மாணவ மாணவியரை தமிழகத்தின் சிறந்த தனியார் பள்ளிகளில் சேர்ந்து மேல்நிலைக்கல்வி பயில்வதற்கான உதவித்திட்டம்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசுப் பள்ளிகளில் பயின்று பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்ட / சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்த 3 மாணவர்கள், 3 மாணவியர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 2 மாணவர்கள் 2 மாணவியர் ஆக மொத்தம் 10 மாணவ மாணவியரைத் தேர்வு செய்து அவர்கள் விரும்புகின்ற தமிழகத்திலுள்ள தலைசிறந்த தனியார் பள்ளிகளில் 11-ஆம் வகுப்பில் சேர்ந்து மேல்நிலைக்கல்வி பெற ஏதுவாக அரசால் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உதவிபெற விரும்பும் மாணவ, மாணவியரின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூபாய் 2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ், ஒரு மாணவருக்கு உயர்ந்தபட்சமாக ஆண்டொன்டிற்கு ரூ.28,000/-க்கு மிகாமல் இரண்டாண்டுகளுக்கு ரூ.56,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. நிதியுதவி விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| கல்விக் கட்டணம் | ரூ.8,000/- |
| பராமரிப்புக் கட்டணம் | ரூ.3650/- |
| விடுதிக் கட்டணம் | ரூ.15,000/- (விடுதியில் சேர்ந்து படிப்பவர்களுக்கு மட்டும்) |
| சிறப்பு பயிற்சிக் கட்டணம் | ரூ.1,500/- |
| ஆக மொத்தம் | ரூ.28,150/--(அ) ரூ.28,000/- (ஓராண்டிற்கு) |

தகுதியுடைய மாணவ / மாணவியர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஒம்) சஜ்ஜன்சிங் ரா.சவான்
மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்

/உண்மை நகல் - உத்தரவுப்படி/

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகர்கோவில்.